## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்காக பெயர்களை பரிந்துரை செய்தல்

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.

**1) <u>அங்கத்தவர் பற்றிய தகவல்கள்</u>**

1. அங்கத்தவரின் முழுப் பெயர் : ..........................................................................................
2. நிரந்தர முகவரி: ..........................................................................................................
3. சேமலாப நிதியத்தின் இலக்கம்: ..........................................................................................
4. பதவிப் பெயர்: ..........................................................................................................
5. பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவகத்தின் பெயர் : ..............................................

**<u>1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 93 (2 அ) உறுப்புரையின் கீழ் பெயர்களை பரிந்துரை செய்தல்</u>**

| | முழுப் பெயர் மற்றும் முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் | உறவு முறை | பங்கு % |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான், இங்கு மேலுள்ள அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ......................(எண்ணிக்கை இலக்கத்தில்) நபரை / நபர்களை எனது பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திலிருந்து எனக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையை எனது மரணத்தின் பின்னர் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைய நபராக / நபர்களாக இத்தால் பெயர் குறிப்பிட்டுப் பரிந்துரைக்கின்றேன்.

மேலும், பெயர்களைப் பரிந்துரை செய்தலுடன் தொடர்பான விதிகள் சம்பந்தமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டலை வாசித்து புரிந்துணர்ந்து கீழ் குறிப்பிடப்படும் சாட்சிகளின் முன்னிலையில் 20....../....../....ஆம் திகதி.........................................................................................இல் கையொப்பமிடப்பட்டது.

.................................................
அங்கத்தவரின் கையொப்பம்

| | |
|---|---|
| ........................................................... | ........................................................... |
| 1 ஆவது சட்சியின் கையொப்பம்<br>திணைக்கள /பிரிவுத் தலைவர்<br>(உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்கவும்) | 2 ஆவது சட்சியின் கையொப்பம்<br>பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின்<br>அங்கத்தவரொருவர் |
| பெயர்.................................................................................. | பெயர்.................................................................................. |
| தேசிய அடையாள அட்டை இல..................................... | தேசிய அடையாள அட்டை இல.................................. |
| பதவிப் பெயர்................................................................... | பதவிப் பெயர்.............................................................. |
| பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிய இல.............................. | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிய இல.......................... |

---

## 2) <u>நிறுவனத் தலைவரின் சான்றிதழ்</u>

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் இலக்கம்.................... இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள திரு. / திருமதி / செல்வி.......................................................................... இந்த நிறுவனத்தில் பணியாற்றுபவர் எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெயரை/ பெயர்களை அந்த ஊழியர் பரிந்துரை செய்துள்ளதாகவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை மற்றும் உண்மையானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| | |
|---|---|
| .......................................................... | .......................................... |
| பதிவாளர் | நிறுவனத் தலைவர் |
| பெயர்............................................................................ | பெயர்............................................................................ |
| தேசிய அடையாள அட்டை இல................................ | தேசிய அடையாள அட்டை இல................................ |

**உத்தியோகபூர்வ முத்திரையை பதித்தல் வேண்டும்**

## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

**பங்களிப்பாளர் வைத்திருத்தல் வேண்டும்**

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்காக பெயரை பரிந்துரை செய்தல் (பெயர் குறிப்பிடுதல்) தொடர்பான வழிகாட்டல் மற்றும் விதிகள்**

1) பெயரை பரிந்துரை செய்வதற்கு கருதும் எந்தவொரு பங்களிப்பாளரும் -

(அ) அவர் திருமணமானவராயின் அவரது வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளைகளை இணைந்தோ அல்லது வெவ்வேறாகவோ பெயர்களை பரிந்துரை செய்தல் வேண்டும்;

(ஆ) அவர் திருமணமாகதவராயின் வேறு ஒருவரின் பெயரைப் பரிந்துரை செய்தல் வேண்டும்.

2) எவருடைய பெயரையும் பரிந்துரை செய்வதற்கு விரும்பாத(கருதாத) பங்களிப்பாளர், பரிந்துரை செய்யவில்லையென பெயரை பரிந்துரை செய்யும் படிவத்தில் குறிப்பிட்டு தனது கருத்தை தெரிவித்தல் வேண்டும்.

3) பெயரைப் பரிந்துரை செய்யும் பங்களிப்பாளர் மரணிப்பதற்கு முன்னர் பெயரைப் பரிந்துரை செய்து ஆணைக் குழுவின் செயலாளரிடம் அல்லது குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் தலைவரிடம் ஒப்படைத்திருந்தாலன்றி அவ்வாறான பரிந்துரைத்தல் செல்லுபடியாகவோ சட்டத்தினால் வலுப்பெறவோ மாட்டாது.

4) பெயர்களைப் பரிந்துரை செய்யும் சகல படிவங்களும் ஆணைக் குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் பங்களிப்பாளர் பணியாற்றும் பிரிவின் அல்லது கிளையின் தலைவரின் முன்னிலையில் மற்றும் அந்தப் பங்களிப்பாளரின் கையொப்பத்திற்கு சாட்சியாக மற்றுமொரு பங்களிப்பாளரின் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

5) எவரேனுமொரு நபருக்கு கையொப்பமிட முடியாத சந்தர்ப்பத்தில் அவரது கையொப்பத்திற்குப் பதிலாக ஆணைக் குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் பங்களிப்பாளர் பணியாற்றும் பிரிவின் அல்லது கிளையின் தலைவரின் முன்னிலையில் தனது இடது கை பெருவிரல் அடையாளத்தை இடல் வேண்டும். அந்த பெருவிரல் அடையாளம் பெயரைப் பரிந்துரை செய்யும் நபரின் பெருவிரல் அடையாளம் என மற்றுமொரு பங்களிப்பாளர் அந்த பெயரைப் பரிந்துரை செய்யும் பத்திரத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

6) பங்களிப்பாளர் ஒருவரால் பரிந்துரை செய்யப்பட்ட ஒரு நபர், அந்தப் பங்களிப்பாளரின் கையொப்பம் அல்லது பெரு விரல் அடையாளத்திற்காக சாட்சியாக இருப்பதற்கோ உறுதிப்படுத்துவதற்கோ தகுதியற்றவராவார்.

7) ஒருவரைப் பார்க்கிலும் அதிகளவு எண்ணிக்கையானோரின் பெயர்களைப் பரிந்துரை செய்திருக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட அனுகூலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய வீதங்களை பரிந்துரை செய்யும் பங்களிப்பாளர், பெயரைப் பரிந்துரை செய்யும் படிவத்தில் உரிய முறையில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

8) எவரேனுமொரு பங்களிப்பாளர், ஒருவரைப் பார்க்கிலும் அதிகளவு எண்ணிக்கையானோரின் பெயர்களைப் பரிந்துரை செய்திருந்தபோதிலும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய வீதங்கள் சம்பந்தமாக எந்தவிதமான வேண்டுகோளையும் விடுத்திருக்காத சந்தர்ப்பத்தில் செலுத்தப்படும் அனுகூலங்களை அவர் பரிந்துரை செய்யப்பட்ட நபர்களிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்படும்.

9) (1.) கீழ் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களின்போது பரிந்துரை செயலிழக்கப்பட்டதாக (நிராகரிக்கப்பட்டதாக) கருதப்படும். அதாவது -

(அ) பரிந்துரை செய்யப்பட்ட நபர் மரணித்தல்;

(ஆ)பரிந்துரை செய்யப்பட்டவர்கள் (பெயர் குறிப்பிடப்பட்டவர்கள்) ஒருவரிலும் அதிகமானவர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பெயர்களைப் பரிந்துரை செய்த பங்களிப்பாளரின் வாழ்நாளினுள் அந்த பெயர் பரிந்துரைக்கப்பட்ட நபர்களில் ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில்; அல்லது

(இ) பங்களிப்பாளர் திருமணமாகுவதற்கு முன்னர் பெயர்களைப் பரிந்துரை செய்து, பின்னர் அந்தப் பங்களிப்பாளர் திருமணம் செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தில்,

(2.) ஒரு பங்களிப்பாளரால் மேற்கொள்ளப்படும் பரிந்துரை செயலிழக்கப்பட்டதாக (நிராகரிக்கப்பட்டதாக) கருதப்படும் சந்தர்ப்பத்தில், பங்களிப்பாளர் புதிய பரிந்துரையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

10) (1.) நிதியத்தின் பங்களிப்பாளர் பரிந்துரை செய்த ஒருவர் -

(அ) அந்தப் பங்களிப்பாளர் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்தப்படும் காலப் பகுதிக்குள் பெயரைப் பரிந்துரை செய்திருந்தால் மாத்திரம் ; மற்றும்

(ஆ) அந்தப் பங்களிப்பாளரின் மரணத்திற்குப் பின்னர் மாத்திரம்;

நிதியத்திலிருந்து அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையைப் பெறுவார்.

(2.) பங்களிப்பாளர் ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் அவரால் பரிந்துரை செய்யப்பட்டவர் இள வயதினராக இருக்கும் சந்தர்ப்பத்தில், அவருக்கு நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய செலுத்துகைகள் -

(அ) அந்த மரணித்த பங்களிப்பாளரின் பரம்பரை நிலபுலன்கள் சம்பந்தமாக நிலபுலன் வழக்கொன்று நிலவவில்லையாயின், அந்த பரிந்துரை செய்யப்பட்ட நபரின் பெயரில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அந்த தொகை வைப்புச் செய்யப்படும். அல்லது

(ஆ) மரணித்த பங்களிப்பாளரின் பரம்பரை நிலபுலன்கள் சம்பந்தமாக நிலபுலன் வழக்கு தொடர்பான விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் நீதிமன்ற ஆணையின் பிரகாரம் அந்த தொகை வைப்புச் செய்யப்படும்.

11) பங்களிப்பாளரின் மரணம் நிகழும் சந்தர்ப்பத்தில் செல்லுபடியாகும் பரிந்துரையொன்று இல்லாதபோது அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப பரிந்துரை செய்யப்பட்டவர் அல்லது பரிந்துரை செய்யப்பட்டவர்கள் மரணித்திருந்தால் குறிப்பிட்ட அனுகூலங்கள் மரணித்த பங்களிப்பாளரின் சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு செலுத்தப்படும்.

12) திருமணமாகாத அல்லது 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாமல் ஊழியர் ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் அவரது ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள பங்களிப்புத் தொகை மற்றும் அதற்கான வட்டியை சட்ட ரீதியான உரிமையாளர்களுக்கு மீளச் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஓய்வூதிய நிதியம் தொடர்பாக பரிந்துரை செய்யப்பட்டவர்கள் கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.